JUICE-2012 JUICE-2012 JUICE-2012 JUICE-2012 JUICE-2012

# PROCEEDINGS

## Jaffna University International Research Conference - 2012

"Capacity Development in a Post-war Context"

JUICE-2012 JUICE-2012 JUICE-2012 JUICE-2012 JUICE-2012

Editors: A. Ramanan and B. Nimalathasan

Jaffna University International Research Conference 2012 (JUICE-2012)

ISBN: 955058503-4

## Manuscripts

- Received : May 2013
- Revised : August 2013
- Accepted : October 2013
- Published : March 2014

## Editorial Board

**Editor-in-Chief:** Prof. S. Srisatkunarajah

**Editors:** Dr. A. Ramanan and Dr. B. Nimalathasan

**Associate Editors:**

- Dr. (Ms.) J. Sinniah, Agriculture
- Dr. E. Y. A. Charles, Applied Sciences and Technology
- Mrs. R. Yogendrarajah, Commerce and Management
- Dr. (Mrs.) A. Sathiaseelan, Education
- Dr. A. Murugananthan, Health and Medical Sciences
- Mr. E. Cumaran, Humanities and Fine Arts
- Dr. P. Abiman, Pure Sciences
- Ms. L.D. Rajasooriyar, Social Sciences

**Technical Assistant:** Mr. S. Gobinath

## Disclaimer

The full papers in this proceeding have been submitted by authors and the views expressed remain the responsibility of the named authors. The statements and opinions stated in these publications do not necessarily represent the views of the Editorial Board of the Jaffna University International Research Conference 2012.

©JUICE-2012, University of Jaffna, Sri Lanka

URL: www.jfn.ac.lk/juice2012

Printed by: Harikanan (Pvt) Ltd., No. 681, K.K.S. Road, Jaffna, Sri Lanka

Proceedings of Jaffna University International Research Conference (JUICE-2012), pp. 232-236, published: March 2014, Sri Lanka

# யாழ்ப்பாணத்தில் இந்துசமய அனுட்டானங்கள் பற்றிய சமகாலச் செல்நெறிகள்

சி. ரமணராஜா
இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
ksramanan30@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்:** சிவபூமி என திருமூல நாயனாரால் சிறப்பிக்கப்பட்ட இலங்கையிலே இந்தியச் சமயங்களின் நேரடிச் செல்வாக்கினையும் செழுமையினையும் உணர முடிகின்றது. இலங்கையின் தலைப்பகுதியாகவும், பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டு விளங்கும் சிறப்பான பகுதியாகவும் யாழ்ப்பாணப் பிரதேசம் திகழ்கின்றது. யாழ்ப்பாணத்து மக்கள் தமக்கேயுரியதான உயர் பண்பாட்டு நாகரிகமிக்க சமூகக் குழுமத்தினராக இருந்து வருகின்றனர். இத்தகைய குழுமத்தினரில் 86 சதவீதமானோர் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர். சைவமும் தமிழும் இம்மக்களின் உணர்வோடும் உள்ளத்தோடும் தொடர்புற்றிருக்கின்றது. அது மட்டுமல்லாமல் இவர்கள் இவ்விரண்டையும் தமது அன்றாட அடிப்படைகளாகப் போற்றி, புலமைத்துவத்துடன் அவற்றை வளர்க்கும் ஆளுமை படைத்தவர்களாகவும் விளங்கி வந்துள்ளனர். ஆனால் நாட்டிலே ஏற்பட்ட அசாதாரணமான சூழலமைவுகளும், அதனால் நிகழ்ந்த தொடர்ச்சியான இடப்பெயர்வுகளும், சமூகத்தில் குறிப்பாக அனுஷ்டான முறைமைகளில் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன. நாகரிக மாற்றம், மதமாற்றம் கலப்புத் திருமணங்கள், நவீன இலத்திரனியல் சாதனங்களின் ஆக்கிரமிப்பு, பொருள்முதல்வாத சிந்தனைகளால் சமயத்தின் மீதுள்ள நம்பிக்கை அற்றுப்போதல், நவீன முறைக் கல்வி போன்ற பின்புலங்களினால் பண்பாட்டு விழுமியங்களைக் கடைப்பிடிப்பதில் இடர்பாடுகள் எழுந்துள்ளன. இத்தகைய இடர்பாடுகள் இந்து சமயம் சார்ந்த அனுட்டானங்களைக் கடைப்பிடிப்பதில் பாரிய இடைவெளிகளைத் தோற்றுவித்துள்ளன. யாழ்ப்பாணத்துச் சைவப் பண்பாட்டின் சிறப்பானது அனுட்டான முறைமைகளின் ஊடாகவும் தனித்துவமடைந்து காணப்பட்டது என்பதனை தெரியப்படுத்தி அதன் இன்றைய நிலையினை வெளிக்கொண்டுவருதல் என்பது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மேலும், தனிமனிதன் தான் சார்ந்த நிலையில் கடைப்பிடித்தொழுகும் அனுட்டானங்களின் முக்கியத்துவத்தினையும், அவற்றைக் கடைப்பிடிப்பதில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள சவால்களையும் இனங்கண்டு வெளிக்கொண்டு வருவதும், அவற்றின் முக்கியத்துவத்தினை உணர்த்துவதனூடாக மக்களின் மேம்பட்ட வாழ்வுக்கு முன்மொழிவுகளை எடுத்துரைப்பதும் இவ்வாய்வின் நோக்கங்களாக அமைகின்றன. பத்திரிகைகள், நேர்காணல்கள், பெரியோர் உரையாடல்கள், சொற்பொழிவுகள், நேரடி அவதானிப்புகள் என்பன அனுட்டானங்களின் சமகால நிலையினை அறிவதற்கான மூலங்களாக உள்ளன. இவ்வாய்வானது ஆய்வுப் பிரதேசமாக யாழ்ப்பாணத்தைக் கொண்டுள்ளது. யாழ்ப்பாணம் என்பது வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் தீவகம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பகுதியாகும். வரலாற்று ஆய்வுமுறை, விபரண ஆய்வுமுறை ஒப்பீட்டு ஆய்வு முறை, கள ஆய்வு முறை முதலிய முறையியலின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. தனிமனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும்வரை கடைப்பிடித்துச் செல்லும் சமய அனுஷ்டானம் சார்ந்த நெறிமுறைகளே இவ்வாய்வின் எல்லையாகும்.

**திறவுச்சொற்கள்:** சமய அனுட்டானம், இந்து சமயம், கடைப்பிடித்தல்.

## I. அறிமுகம்

சமுதாயத்தில் தனிமனிதனின் ஆன்மீக நிலைப்பட்ட வாழ்க்கை நெறியே சமயம் எனப்படும். ஆதலால் சமயமென்பது சமூகம் சார்ந்ததாகவே இருந்து வருகின்றது. உலகில் தோன்றிய சமயங்கள் வரிசையில் இந்துசமயம் மிகவும் தொன்மையானது. சைவம் என்ற பெயரைக் காட்டிலும் இந்து என்ற பெயரே சர்வதேச ரீதியில் வழங்குவதால் சைவத்தை இந்து என்று வழங்குவது தவிர்க்க முடியாதவாறு உலகப் பிரசித்தி பெற்றுவிடுகின்றது [3].

சைவ சமயம் எல்லா மக்களுக்கும் அவரவர் பக்குவத்திற்கேற்ப படிமுறையாய் போதனைகளையும் சாதனைகளையும் வகுத்துள்ளது. அன்றியும் நியாய வரம்புக்கும் அனுபவத்துக்கும் பொருந்துமாறும் அது அமைந்துள்ளது. இவ்வண்ணம் வகுக்கப்பெற்ற போதனைகளும் சாதனைகளும் அச்சமயத்தின் அடையாளப் பெறுமானங்களாகவே உள்ளன. இவையே அனுட்டானங்கள் என்ற வகையில் வெளித் தெரிகின்றன. வேத சிவாகமங்களும் மற்றும் இதிகாசங்களும் புராணங்களும் சைவ வாழ்வியலுக்கான மூல நூல்களாகத் திகழ்கின்றன.

## II. சமய அனுட்டானங்கள் - ஓர் விளக்கம்

ஒருவரது சமயப் பேணுகையின் வெளிப்பாடுகளை சமய அனுட்டானங்கள் எனக் கூறலாம். அனுட்டானங்களானவை வேதமரபு, ஆகமமரபு மற்றும் ஆகமம் சாராத மரபு தழுவியனவாக இந்து சமயத்தவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இவை ஆலயம் தழுவிய நிலை, தனிமனிதன் சார்ந்த இல்லற நிலை, ஆகிய நிலைகளில் கடைப்பிடிக்கப்பட்டும் பேணப்பட்டும் வருகின்றன. ஒரு வகையில் உலகச் சமயங்களிலிருந்து இந்து சமயத்தை வேறுபடுத்திக் காட்டுவன எனும் வகையிலும் சமயம் சார்ந்த அனுட்டானங்கள் முக்கியம் பெறுகின்றன.

இங்கு அனுட்டானம் என்பதற்கு “அனுட்டிக்கப்படுவது அனுட்டானம்” எனவும், “சைவ வாழ்வியலில் அனுட்டிக்கத் தக்கனவே சமய அனுட்டானம்” [4] எனவும் பொருளுரைக்க முடிகிறது. தனிமனிதன் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை கடைப்பிடித்துச் செல்லப்படுகின்ற வாழ்வியல் நடைமுறைகளையும் இதுவுணர்த்தி நிற்கக் காணலாம்.

காலையில் செய்யப்படும் நித்திய கருமங்களின் தொகுப்பு, ஆத்திக நெறியுடையோர், காலை மாலை வழிபாட்டில் ஆற்றும் செயல், ஒழுக்கம், கடமை, நிலை பெற்றுவிட்ட வழக்கம், ஒரு நியதியைக் கடைப்பிடித்தல், சமயம் விதித்த நடைமுறைகளைப் பின்பற்றுதல் [5] என்று பெருஞ் சொல்லகராதி அனுட்டானம் என்பதற்கு விளக்கம் தருகின்றது.

ஒருவர் பெற்றுக் கொண்ட தீட்சையில் கற்பிக்கப்பட்ட விதிமுறைகளை கிரமப்பிரகாரம் தினசரி அனுட்டிக்குஞ் செயல் “அனுட்டானம்” எனப்படும் [1]. சைவ சமயத்தவரொருவர் தன்னைச் சிவமாகப் பாவிக்கும் பாவனைக்குப் பயிற்சிக் களமாக அமைவது சைவானுட்டானமாகும்.

இவ்வகையில் அனுட்டானங்களாவன, நித்திய கருமங்கள், தீட்சை பெறுதல், விபூதி தரித்தல், உருத்திராக்கம் தரித்தல், பஞ்சாட்சரம் செபித்தல், ஆசார அனுட்டானம் (கடமை, பணிவு, நன்னடத்தை, பெரியோரை மதித்தல், ...), விரத அனுட்டானங்கள், ஆலய வழிபாடுகள் (பஞ்சாங்க, அட்டாங்க நமஸ்காரங்கள்) [2].

## III. சமய அனுட்டானங்களைக் கடைப்பிடிப்பதில் எழும் பிரச்சினைகள்

இந்து சமயமானது சில காலங்களில் சவால்களை எதிர்கொண்டு தளர்வுற்றுச் சென்ற போது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் போன்ற சமயப் பெரியவர்களாலும், சித்தபுருஷர்களாலும், அறிஞர்களாலும் மீளுருவாக்கம் செய்யப்பட்டு வந்தது. மேலைத்தேயத்தவர்களின் வருகையினால் இந்து சமயப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதிலும், தக்க வைப்பதிலும் பாரிய இடர்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இவ் வேளையிலும் சமயம் சார்ந்த அனுட்டானங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் யாழ்ப்பாணத்து மக்கள் கடைப்பிடித்து வந்தனர். ஆனால் சமகாலச் செல்நெறியில் இவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவதில் பல்வேறு சிக்கல்கள் இந்து சமூகத்தவர்கள் மத்தியில் எழுந்துள்ளன.

இவற்றை அனுசரித்துச் செல்ல முடியாத வகையில் அகப்புறச் சூழலமைவுகள் காணப்படுவதும் இங்கு எதிர்நோக்கும் புதிய வடிவிலான பிரச்சினையாகும். இவ்வகையில் சமய அனுட்டானங்களை கடைப்பிடித்துச் செல்லாமைக்கான காரணங்களாக, அல்லது அவற்றைக் கடைப்பிடிப்பதில் எழுகின்ற சிக்கல்களாக இனங்கண்டவற்றை பின்வருமாறு கூற இயலும்.

உள்நாட்டு யுத்தமும் அதன் விளைவுகளான தொடர்ச்சியான இடப்பெயர்வுகள், மதமாற்றம், கலப்புத்திருமணங்கள், முதலியன அனுட்டானங்களைக் கடைப்பிடித்தொழுகா நிலைக்கு பின்புலங்களாக அமைவனவற்றுள் முதன்மை பெறுகின்றன. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளும், அவற்றினால் ஏற்பட்ட மாறுதல் போக்குகளும் சமய, சமூக நிலைகளிலும் அவை சார்ந்த அனுட்டானங்களைக் கடைப்பிடிக்கும் நிலைகளிலும் பாரிய இடைவெளிகளைத் தோற்றுவித்துள்ளன. பண்பாட்டு அடையாளங்கள் தொலைக்கப்பட்டும் சமய அனுட்டானங்கள் மறைக்கப்பட்டும் வருகின்றன.

மாறிவரும் உலக மயமாக்கலின் விளைவு நாகரிக நிலையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. மனித நடத்தையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் உலகமயமாதலின் பங்கு விதந்து குறிப்பிடற்குரியது. தனிமனித நடத்தைகள் சமூகப் பிறழ்வுகளுக்கு வழிசமைக்கின்றது. இத்தகு பிறழ்வுகள் ஆன்மீக நிலையிலும், அனுட்டான முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. பொருள் முதல்வாத சிந்தனைகளை இதற்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.

இன்றைய தொழில்முறைக் கல்வியின் விருத்தியினால் சமயக் கல்வி (ஆன்மீகக் கல்வி) செல்வாக்கினை இழந்து வருகின்றமை, நவீன இலத்திரனியல் சாதனங்களான இணையம், (Internet), முகப்புத்தகம் (facebook), கைப்பேசி (Handphone), தொலைக்காட்சி (Television) முதலியவற்றின் ஆக்கிரமிப்புக்குள் இளந்தலைமுறையினர் உள்வாங்கப் பட்டிருத்தல், மேற்போந்த உள்வாங்கல்களுக்கு சுயகௌரவம் என்ற நிலையில் பெற்றோர்களின் பங்களிப்புகள் காரணமாதல், சிறுதெய்வ வழிபாட்டு முறைகளின் எழுச்சி, அழகியல் மெருகூட்டல் செயற்பாடுகள் மேலெழுந்து காணப்படுதல், வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் எனும் இருவகைப் பஞ்சாங்கங்களைப் பின்பற்றுகின்ற சமூகக் குழுமங்கள் காணப்படுகின்றமை, பாடசாலைகளில் சமயபாடம் யாவரினாலும் கற்பிக்கலாமென்ற நிலைப்பாடு காணப்படுகின்றமை. கிரியைகள், விரதங்கள், விழாக்கள், மற்றும் பண்டிகைக் காலங்களில் அனுட்டானம் சார்ந்த ஒழுங்கு முறைகள் பேணப்படாமை, பண்பாட்டுத் தளங்களான ஆலயங்களில் மேலோங்கியிருக்கும் பிறழ்வுகள், சமயச் சடங்குகள், கிரியைகளை ஆற்றும் சிலர் அது பற்றிய போதிய பயிற்சி மற்றும் விளக்கங்களை கொண்டு விளங்காமை, பிறருக்கு அதன் அவசியத்தை, சிறப்பை, அறிவியல் கருத்துக்களை மக்களுக்கு வெளிப்படுத்தாமை, பதவி ஆசைகளோடு ஆலயமென்ற நிறுவனத்தில் நிர்வாகப் பொறுப்பு வகிப்பவர்கள் சமயஞானம் குன்றியவர்களாக காணப்படுதல், சமூகத்தைச் சீரமைப்பதற்காக ஆலயங்கள் தேவைப்பட்டாலும், பெருகிக் காணப்படுகின்ற ஆலயங்களை பரிபாலனம் செய்வதென்பது இன்றைய சமூகத்தின் சவால்களாக விளங்கி வருகின்றமை போன்ற இன்னோரன்ன பல காரணிகள் சமய அனுட்டானங்களைக் கடைப்பிடித்துச் செல்ல முடியாமைக்கான பின்புலங்களாக அமைகின்றன.

## IV. அனுட்டானங்களின் முக்கியத்துவத்தினை உணர்த்தி கடைப்பிடிக்கச் செய்தலுக்கான வழிகள் - தீர்வுகளும் சில முன்யோசனைகளும்

- அகத்திலும் புறத்திலும் காணப்படுகின்ற சூழலமைவுகள் அனுட்டானங்களைக் கடைப்பிடித்துச் செல்லுகைக்கான தடைகளாக அமைக்கின்றன. இந்நிலையில் இதன் முக்கியத்துவத்தினை உணர்த்தி அவற்றைக் கடைப்பிடிக்கச் செய்வதென்பது அவசியமாகின்றது. இதற்குப் பல வழிகள் இருக்கின்றன. அதற்கான தீர்வுகளும் சில முன்யோசனைகளும் என்ற நிலையில் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

- பாடசாலைகள், கல்லூரிகளிலுள்ள இந்துமன்றங்கள், இந்துமாமன்றம், இந்து சமயப் பேரவை மற்றும் பிற சமய நிறுவனங்கள் வாயிலாக அவற்றின் முக்கியத்துவத்தினை உணர்த்துதல்.

- சிவாச்சாரியார்கள், பூசகர்கள் மத்தியில் அநுட்டான விதிமுறைகளைப் பற்றிய கருத்துக்களை அவற்றின் பொருளறிந்து செய்ய அறிவூட்டுதல். இவர்கள் மூலமாக, ஆலயம் நோக்கி வரும் அடியவர்களுக்கு அவற்றை தெளிவுபடுத்தி கடைப்பிடிக்கத் தூண்டுதல்.

- இன்றைய காலத்தில் மக்களிடம் அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்ற இலத்திரனியல் சாதனங்களூடாக சமய நிகழ்வுகளுக்கு முக்கியமளித்து அனுட்டானங்களின் இன்றியமையாமையை வெளிக்கொணர்தல்.

- இளந்தலை முறையினரின் நவீன இலத்திரனியல் சாதனங்களின் எல்லை மீறிய பாவனைக்குப் பெற்றோர்கள் பாதுகாவலர்களாகவும், கட்டுப்பாட்டாளர்களாகவும் விளங்குதல். அத்துடன் அனுட்டான முறைமைகளை பிள்ளைகளை கடைப்பிடிக்கத் தூண்டுதல், வீட்டுச் சூழலை அதற்கான பயிற்சிக் கூடமாக மாற்றுவதில் பெற்றோர்கள் முன்னின்று செயற்படுதல்.

- நவீன தொழில் முறைக் கல்வியினால் வீழ்ச்சி கண்டு போகும்பாரம்பரியக் கல்வியினை வளர்த்தெடுத்தல். பாரம்பரியக் கல்வி முறையே பக்தி, பணிவு, பெரியோரை மதித்தல், பெற்றோரை மதித்தல், விருந்தோம்பல், கடமைப்பொறுப்பு, நேர்மை, ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, இன அடையாளம் பேணுதல், பிரதேச மற்றும் மொழிப்பற்று ... என்ற ஆசார அனுட்டானங்களையும் வழிவழியாகப் பேணிக்காத்து வந்ததில் பெரும்பங்கு வகித்தது.

- மாணவர் சமூகத்திற்கான இந்துசமய அனுட்டானம் பற்றிய அறிவையும், விழிப்புணர்வையும், அவற்றிலுள்ள அறிவியல் சிந்தனைகளையும் பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தல்.
  - அது சார்ந்த போட்டிப் பரீட்சைகளை நடாத்தி பரிசில்களை வழங்கி ஊக்குவித்தல்.
  - தியான வகுப்புகள், பயிற்சிகள்
  - யோகா வகுப்புகள், பயிற்சிகள்
  - கூட்டுப் பிரார்த்தனைகள்.
  - பொதுத்தொண்டு
  - சமயம் சார்பான சுற்றுலாக்கள்.

- சமய பாடம் யாவரினாலும் கற்பிக்கப்படலாம் என்ற தவறான எண்ணப்பாங்கு மாற்றப்பட வேண்டும். தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் சமய பாடங்களைக் கற்பிப்பதற்கு நியமிக்கப்படாமையினால் மாணவர் மத்தியில் இது சார்ந்து எழுகின்ற சந்தேகங்களையும், போதிய விளக்கங்களையும், அறிவியல் சார் வெளிப்பாடுகளையும் வழங்க முடியாதுள்ளது. எனவே தகுதி வாய்ந்த ஆசிரிய நியமனங்கள் மூலம் பாடசாலைகளில் சமயக் கல்வியின் முக்கியத்துவம் உணர்த்தப்பட வேண்டும்.

- சமய பாடங்களில் சமய அனுட்டான போதனைகளுக்கும், சாதனைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தல்.

- சமய சின்னங்களிலும், வழிபாட்டு முறைகளிலும் காணப்படுகின்ற அறிவியல் சிந்தனைகளை வெளிக்கொண்டுவருதல்.

- சமய அனுட்டானங்களின் பெறுமானங்களை அறிந்துணர முற்படுதல், அவற்றிலுள்ள அறிவியல் சிந்தனைகள், குறிப்பாக நோய் நீக்கம் என்பன பற்றிய அறிவுசார் கருத்துக்களை சரிவர விளங்கிக் கொள்வதன் மூலம் அனுட்டானங்களின் முக்கியத்துவத்தினை உணரமுடியும்.

இதற்குச் சான்றாக நித்திய கருமச் செயல்களைக் குறிப்பிடலாம். நித்திய கருமம் யாவருக்கும் பொதுவாய் உள்ளதாயினும், சைவ சமயிகள் ஒழுங்காகக் கைக்கொள்ள வேண்டுமென விதிக்கப்பட்டுள்ளன. தேகசுகம்,புனிதம், தீர்க்காயுள், சந்தோசம், சுறுசுறுப்பு உற்சாகம், நோயின்மை, உழைப்பில் வெற்றி முதலிய நன்மைகளை நித்திய கருமச் செயற்பாடுகள் அளிக்கவல்லன ஆகையால் அவற்றைக் கடைப்பிடிப்பதனை வழக்கமாக்கிக் கொள்வதற்கு முனைதல்.

- சமய அனுட்டானங்களின் முக்கியத்துவத்தினை கடந்த கால பதிவேடுகளூடாக உணர்த்துதல். அவற்றை எடுத்துக் காட்டுகளுடன் இறுவட்டுக்கள் மூலமாக சான்றுபடுத்துதல்.

- பழைய நூல்களை மீள்பதிப்புச் செய்வதுடன் அவற்றைச் சுருக்கமாகவும் எளிமையாகவும் விளங்கிக் கொள்ள ஆவன செய்தல்.

- அழகியல் மெருகூட்டல் செயற்பாடுகள் மேலேழுச்சி பெற்றுக் காணப்படும் இன்றைய சூழலில் அனுட்டான முறைமைகளை வீட்டிலேனும், கடைப்பிடித்துச் செல்வதற்கான வழிகளை முன்னெடுத்தல். என்ற வகையில் சில முன்யோசனைகள் தீர்வுகளுக்கு வழிகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்திச் செல்லும் போது விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்த முடியும். சமகாலத்தில் அருகிச் சென்று கொண்டிருக்கின்ற அனுட்டான முறைமைகளும், ஆசார அனுட்டானங்களும் பேணப்படும். அடுத்த சந்ததியினருக்கும் கையளிப்புச் செய்யும் நிகழ்வு அரங்கேறும்.

**அட்டவணை 1:** இந்து சமய அனுட்டானங்களைக் கடைப்பிடித்துச் செல்வோரின் இன்றைய நிலை

| **அனுட்டானங்கள்** | **கடைப்பிடிப்போர்** | | | | |
|---|---|---|---|---|---|
| | அதிகம் | குறைவு | மிகக் குறைவு | மிகமிக குறைவு | இல்லை |
| தீட்சை பெறுவோர் | | | | ✓ | |
| விபூதி தரிப்போர் | | | | | |
| 1. திரிபுண்டரம் | | | ✓ | | |
| 2. உத்தூளனம் | | | | ✓ | |
| விபூதியை ஒற்றைக்குறியாக தரிப்போர் | ✓ | | | | |
| உருத்திராட்சம் அணிவோர் | | | | ✓ | |
| பஞ்சாட்சரம் செபிப்போர் | | | | ✓ | |
| பஞ்சாங்க நமஸ்காரம் செய்வோர் | | | ✓ | | |
| அட்டாங்க நமஸ்காரம் செய்வோர் | | | ✓ | | |
| சீரான ஆலய வழிபாடுகள் | | ✓ | | | |
| ஆசார அனுட்டானங்கள் (பணிவு, பெரியோரை மதித்தல்.... | | | | ✓ | |
| நித்திய கருமங்களைச் செய்வோர் | | | ✓ | | |

## V. முடிவுரை

தனித்துவமான உயர் பண்பாட்டு விழுமியங்களோடும், புலமைத்துவத்துடனும், பல்பரிமாண ஆளுமைகளுடனும் சைவத்தையும் தமிழையும் வளர்த்து வந்த மக்கள் வாழ் பிரதேசமான யாழ்ப்பாணத்தில் அனுட்டான முறைமைகள் மக்கள் வாழ்வியலுடன் இரண்டறக்கலந்து வந்துள்ளது. சமகாலத்தில் புறத்திலும் அகத்திலும் ஏற்பட்ட இறுக்கமான சூழ்நிலைகள் அதன் செல்நெறிப் போக்கில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அதனை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணம் இருப்பினும் அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதென்பது பெரும் சவாலாகவே உள்ளது. ஆகவே வாழுகின்ற சமூகத்தில் மாற்றங்கள் தேவை என்ற தன்னுணர்ச்சிப் போக்கினை ஏற்படுத்த சைவ மக்கள் இலட்சியத்துடன் களமமைத்துச் செயற்படுதல் வேண்டுமென்பது காலத்தின் தேவையாகவே உள்ளது.

## உசாத்துணைகள்

[1]. அருணாசலம், கா. புலவர்மணி, சைவ சமய சித்தாமணி, மட்டக்களப்பு தமிழ்க்கலைமன்றம், 1954
[2]. ஆறுமுக நாவலர், சைவசமய வினாவிடை, முல்லை நிலையம் சென்னை, 2002.
[3]. கைலாசநாதக்குருக்கள். கா, இந்துப்பண்பாடுசில சிந்தனைகள்,பிரம்மஸ்ரீ கா.கைலாச நாதக்க குருக்கள் ஞாபகார்த்த சபை சிவன் கோயில், நல்லூர், யாழ்ப்பாணம், 2002.
[4]. கந்தையா, மு, சிவாலய சேவை ஏன்? எப்படி? சைவ சமய அபிவிருத்திச் சங்கம், ஏழாலை, மேற்கு, சுன்னாகம், 1986.
[5]. பெருஞ்சொல்லகராதி, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1988.